

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கொளத்துப்பாளையம் பேரூராட்சி பகுதியில் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு நிர்வாகிகளை சந்தித்தார். உடன் மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன், தங்க தமிழ்செல்வன் எம்பி, சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., ராஜா எம்.எல்.ஏ., மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ., தாராபுரம் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கே.கே.துரைசாமி, துணை செயலாளர் சி.செந்தில்குமார், காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் லட்சுமணன் உள்பட பலர் உள்ளனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து பவானி வடக்கு ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்ட மூலனூர் கிழக்கு ஒன்றியம், தூரம்பாடி ஊராட்சி வாக்குச் சாவடி எண் 256 ல் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பவானி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கே.ஏ.சேகர், பவானி இளங்கோவன்நாகராசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பது குறித்து கோவை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட குண்டடம் மேற்கு ஒன்றிய, ஊராட்சி பகுதிகளுக்கான தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, ஒன்றிய கழக செயலாளர் சு.கசந்திரசேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.ஜெயக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் உள்பட மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா அவர்களை ஆதரித்து புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் ராயப்பட்டினம் பகுதியில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர். புதுக்கோட்டை மாநகர துணை மேயரும் மாவட்ட பொருளாளருமான எம்.லியாகத் அலி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.எஸ். கருப்பையா, ஒன்றிய செயலாளர்கள் குளவாய்ப்பட்டி சி.சண்முகம், ஆர்.ஆர்,சாமிநாதன், புதுக்கோட்டை மாநகர அவைத்தலைவர் அ.ரெத்தினம், மாநகர துணைச் செயலாளர் மணிவேலன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் டாக்டர் கே.என்.அமானுல்லா, எஸ்.வி.ஆர்.ஸ்டாலன், சுந்தர்ராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விஸ்வநாதன், ஆர்.ஆர்.விஜயபாஸ்கர், ரெங்கராஜ், ரமேஷ் பாண்டி, விஸ்வநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வாக்குகளை சேகரித்தனர்.

# தலைமை தேர்தல் ஆணையரை பதவிநீக்கக் கோரி போராட்டம்!

## இடதுசாரி கட்சிகள் அறிவிப்பு!

சென்னை, செப்.27- தலைமை தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி இன்று முதல் அக்டோபர் 2ம் தேதி வரை ஒரு வாரம் தொடர் போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவித்துள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட 5 இடது சாரி கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போதைய தேர்தல் ஆணையம் வெளிப்படைத்தன்மை, ஜனநாயகச் செயல்பாடு, அனைவருக்கும் வாக்குரிமை எனும் அடிப்படை ஜனநாயகக் கோட்பாட்டைப் பாதுகாக்க தவறிவிட்டதாக குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் மீதான பொது மக்களின் நம்பிக்கையைச் சிதைத்துள்ளது, தேர்தல் ஆணையத்தின் மீதான நம்பகத்தன்மை முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகவும் சரிந்துவிட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு காரணமான தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும், SIR நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், நீக்கப்பட்ட வாக்காளர்கள் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தேர்தல் ஆணையர்கள் நியமன குழு உச்ச நீதிமன்றம் முன்மொழிந்த வழிமுறையின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு முழுதும் இன்று முதல் அக்டோபர் 2 வரை தேசிய அளவில் போராட்டம் நடைபெறும் என்று இடதுசாரி கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன.



தாராபுரம் இடை தேர்தலில் நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நல்லாம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட 242,243,244 ஆகிய வாக்குச்சாவடி பகுதிகளில் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜ்6 வீதி வீதியாக சென்று வேட்பாளர் சுகன்யா அவர்களுக்கு வாக்கு சேகரித்தார். உடன் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் மு.திராவிடமணி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், நல்லாம்பாளையம் நிர்வாகிகள் ஞானசேகர், சிவசாமி, கந்தசாமி, காளிமுத்து , அருண்குமார், கந்தசாமி, சரவணன், பாலகிருஷ்ணன், கதிரேசன், உதயகுமார், மாயவன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




மக்கள் விரோத தொழிலாளர் விரோத மத்திய மாநில அரசுகளை கண்டித்து கோவை மாவட்ட தொ.மு.ச கவுன்சில் (எல்பிஎப்) மற்றும் இணைப்பு சங்கங்கள் சார்பில் கவுன்சில் செயலாளர் சிடிசி துரைசாமி தலைமையில் கவுன்சில் தலைவர் ராக்கிமுத்து வரவேற்புரையில் கவுன்சில் பொருளாளர் ராதா கிருஷ்ணன், கவுன்சில் நிர்வாகிகள் வணங்காமுடி, உமாகாந்தன், ஸ்டீபன், அப்பாவு, வாசுகி, கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தொமுச பேரவை, தொலைத்தொடர்பு துறை இணை பொதுமேலாளர் விஜயகுமார், பேரவை இணை பொது செயலாளர் பிரபாகரன், மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன், மற்றும் நாகராஜ் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் தொ.மு.ச. சிவில் சப்ளை ராஜ கிருஷ்ணன், டாஸ்மாக் தொ.மு.ச. சுப்பிரமணி, மின்வாரியம் தொ.மு.ச. சந்திரன், ஆவின் தொ.மு.ச. ஆனந்த், போக்குவரத்து தொ.மு.ச. செல்லப்பன், ஓய்வு பெற்ற போக்குவரத்து தொ.மு.ச. பாலு, மோட்டார் வாகன தொ.மு.ச. மோகன், பொறியாளர் தொ.மு.ச. கோபால், தமிழ்நாடு சிறு கடைகள் மற்றும் குறு தொழிலகம் தொ.மு.ச. குமாரராஜ பாண்டியன், சிடிசி கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல் கள பணியின் பேது சென்னாக்கல் பாளையத்தில் கழக மூத்த உறுப்பினர் 92 வயதுடைய ஆறுசாமியை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன், முன்னாள் அமைச்சர் முனைவர் கோவி. சொழியன் ஆகியோர் நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்தனர். உடன் கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றிய செயலாளர் தியாக.சுரேஷ்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர். முருகன், சென்னாக்கல்பாளைய கழக நிர்வாகிகள் பாலகிருஷ்ணன், பார்த்திபன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட டிவிஎஸ் கார்னர் ரவுண்டானா பகுதியில் நீண்ட நாட்களாக உயர்மின் கோபுர விளக்கு அமைக்கப்படாமல் இருந்ததால், இரவு நேரங்களில் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு சிரமம் ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, அப்பகுதியில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்து பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு பாதுகாப்பான போக்குவரத்து வசதி ஏற்படுத்திட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தலின் பேரில் தற்போது உயர்மின் கோபுர விளக்கு அமைக்கும் பணி நிறைவு பெற்றுள்ள நிலையில், அதனை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் உடனிருந்தனர்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவுக்கு ஆதரவாக நஞ்சியம்பாளையம் மற்றும் தொப்பம்பட்டி ஊராட்சிகளுக்கான பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.